# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 02.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.13651/F/2024**

திரு G. ராமச்சந்திரன் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / தனிவட்டாட்சியர் (நி.எ.),
தேசிய நெடுஞ்சாலைகள்,
மாமல்லபுரம் - புதுச்சேரி விரைவுச்சாலைத் திட்டம், -- பொது அதிகார அமைப்பு
அலகு - 3, செங்கல்பட்டு மாவட்டம்.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 08.03.2024 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 01.04.2024 & 17.04.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | NIL |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 18.10.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (02.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு G. ராமச்சந்திரன் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு R. சண்முகம், தனிவட்டாட்சியர் (நி.எ), மாமல்லபுரம் - புதுச்சேரி விரைவுச்சாலைத்திட்டம், அலகு-3, செங்கல்பட்டு மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், செங்கல்பட்டு மாவட்டம், தேசிய நெடுஞ்சாலை அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், புல எண்.222, உட்பிரிவு எண்.3B2, பழைய புல மற்றும் உட்பிரிவு எண்.222/3B, பட்டா எண்.904, பழைய புல மற்றும் உட்பிரிவு எண்.222/3B-ன் மொத்த நிலப்பரப்பு எவ்வளவு, 1997-ஆம் ஆண்டு கிழக்கு கடற்கரை சாலையினை அகலப்படுத்தவும் பலப்படுத்தும் பொருட்டும் கையப்படுத்தப்பட்ட புல எண்.222/3B-ன் நில அளவு, 2021-ஆம் ஆண்டு மாமல்லபுரம்-புதுச்சேரி தேசிய விரைவு சாலைத் திட்டம்-அலகு-3-க்கு எடுக்கப்பட்ட

புல எண்.222/3B2-ன் நில அளவு மற்றும் தற்போதைய நில வரைபடம் (FMB), புல எண்.222/3B2-ன் நில பத்திர நகல், உரிமையாளர்கள் கையொப்பமிட்ட விண்ணப்பம் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத்தொகையின் விவரங்கள், இழப்பீட்டுத்தொகை வழங்கப்பட்ட நபர்கள் பற்றிய விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (02.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து நாளதுவரையில் தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு த.பெ.உ.சட்டம்.12/2025 நாள் 01.04.2025 தேதியிட்டு பதிவுத்தபாலின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தில் தாக்கல் செய்தார். ஆணையம் அதனை கவனமுடன் பரிசீலனை செய்கையில், பொதுத்தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் போதுமானது எனக் கருதி, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.13651/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / தனிவட்டாட்சியர் (நி.எ.),
தேசிய நெடுஞ்சாலைகள்,
மாமல்லபுரம் - புதுச்சேரி விரைவுச்சாலைத் திட்டம்,
அலகு - 3, செங்கல்பட்டு மாவட்டம்.

**<u>வழக்கு எண்.SA.13651/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு G. ராமச்சந்திரன், த/பெ. கங்காதுரை,
எண்.47, முகையூர் தோப்பு,
முகையூர், செய்யூர் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம் - 603 305.

Copy to: File
SNPS / 03.04.2025